[17th July 1964

இந்தியாவிலும், உலகத்திலும் அந்த மலரை பார்க்கிறார்கள். நாட்டின் நிர்வாகத்தில் உள்ள பல காரியங்கள் பற்றியும், அந்த நிர்வாகத்தில் உள்ள பல தலைவர்களாலும் கட்டுரைகள் அந்த மலரில் வெளியிட்டிருப்பதன் காரணமாக அதை பல பேர் வாங்கிப் பார்க்கிறார்கள், அதனால் ஏராளமான விளம்பரம் ஏற்படும் என்ற காரணத்தினால் தான் கொடுக்கப்பட்டது.

Power Supply to Kerala

* 514 *Q.*—Sri M. KALYANASUNDARAM : } Will the
Sri K. A. MATHIALAGAN : }
Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation has been received from the Kerala Government for the supply of power from Neyveli Project; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes. The Government of Kerala requested this Government to spare power temporarily from the Neyveli Lignite Project to help them to tide over the acute shortage facing them. We have agreed to spare them 21,000 K.W. of power during night hours.

9-30 a.m. திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த ஏற்பாடு எப்போதும் நிரந்தரமான ஏற்பாடா? அல்லது தற்காலிகமாக அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய கஷ்டத்தைத் தீர்க்க ஏற்பட்டு இருக்கக்கூடிய ஏற்பாடா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது தற்காலிக ஏற்பாடு தான். மழை வந்த பிறகுகூட அவர்கள் இது தங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

* 515 கேள்வி—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி: }
திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் முதல்
திரு. எஸ். ஜே. ராமசாமி : }
அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(1) பயணப் படி, (2) அன்றாடப் படி, (3) மோட்டார் வண்டி நிர்வாக செலவு ஆகியவை சம்பந்தமாக 1963-64 ஜனவரி முடிய ஒவ்வொரு அமைச்சருக்கும் ஆன செலவு எவ்வளவு, மாத வாரியாக?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சபையில் ஒரு அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

[a] 125-128-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.